இணைந்து செய்வோம்

நெகிழிப் பொருள்களுக்கு மாற்றாக எளிதில் மட்கும் பொருள்களாக எவற்றையெல்லாம் பயன்படுத்தலாம் என்பதைப் பட்டியலிடுக.

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________

சொற்களை இனம்கண்டு அதற்குரிய பெட்டிக்குக் கீழே எழுதுக.

கண்ணாடித்துண்டு, நெகிழிப்பை, காகிதத்தாள், சணல்பை, பீங்கான் தட்டு, இலை

1. ______________
2. ______________
3. ______________

1. ______________
2. ______________
3. ______________

ஒருமை, பன்மை அறிவோமா?

7G3NJF

ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**.
ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

ஒருமைச் சொல்லுக்கு உரிய பன்மைச் சொல்லை எழுதுவோம்

பந்து	
ஆமை	
முயல்	
பூனை	

பூ	
விழா	
பசு	
வினா	

படம்	
மரம்	
சிங்கம்	
காகம்	

பல்	
கல்	
சொல்	
புல்	

முள்	
தாள்	
ஆள்	
பொருள்	

6 துணிந்தவர் வெற்றி கொள்வர்

மூன்றாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு அவர்களின் வகுப்பு ஆசிரியர் ஒரு போட்டியை அறிவித்தார். ஓர் அறையின் நடுவில் பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அந்த அறையினுள் சென்று பெட்டியினைத் தூக்கி வருபவரே வெற்றியாளர் என்பதே அப்போட்டியாகும்.

அனைத்து மாணவர்களும் ஆவலுடன் பெட்டி வைக்கப்பட்டிருந்த அறையினுள் சென்றனர். அறையின் நடுவில் வைக்கப்பட்டிருந்த பெட்டி உருவ அளவில் பெரியதாக இருந்தது. அதனைக் கண்டவுடன் மாணவர்கள் பலர் தங்களால் அப்பெட்டியினைத் தூக்க இயலாது எனப் போட்டியிலிருந்து விலகி விட்டனர். மேலும் சிலர் பெட்டிக்கு அருகே சென்று பின்னர் தங்களால் பெட்டியைத் தூக்க இயலவில்லை என்றால் மற்றவர்கள் சிரிப்பார்களே என்று நினைத்துப் போட்டியில் கலந்து கொள்ளாமல் திரும்பிவிட்டனர். கவியரசி என்ற மாணவி மட்டும் முயற்சி செய்து பார்ப்போமே என்று எண்ணி, பெட்டியினை நகர்த்தியபோது பெட்டி எளிதாக நகர்ந்தது. உடனே, அம்மாணவி பெட்டியினை எளிதாகத் தூக்கினாள்.

கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள்/ ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துதல்

பிற மாணவர்கள் அனைவரும் இதனை வியப்புடன் பார்த்தனர். பின்னர் தயக்கம் விலகி அனைவரும் ஓடிச்சென்று தாங்களும் பெட்டியினை தூக்கிப் பார்த்தனர். பெட்டி தூக்குவதற்குச் சுலபமாக இருந்தது. மாணவ, மாணவிகள் ஆசிரியரிடம் சென்று பெட்டி பெரியதாக இருந்ததால் நாங்கள் முயற்சி செய்யவில்லை என்றனர். அதற்கு ஆசிரியர் அது காகிதத்தால் செய்த பெட்டி என்று மாணவர்களிடம் விளக்கினார். மேலும் ஒரு செயலில் இறங்குவதற்குமுன் சிந்திக்க வேண்டும், ஆனால் முயற்சி செய்யாமல் இருக்கக் கூடாது. நம்மால் முடியும் என்று நம்ப வேண்டும் என அறிவுறுத்தினார்.

நீங்கள் எல்லாரும் தயக்கம் காட்டியதால் வெற்றி பெறவில்லை. தன்னால் முடியும் என்று நம்பி கவியரசி முயன்றதால் வெற்றி பெற்றாள். எனவே அன்புக் குழந்தைகளே,

"தோல்வியின் அடையாளம் தயக்கம்
வெற்றியின் அடையாளம் முயற்சி
துணிந்தவர் தோற்பதில்லை
தயங்கியவர் வென்றதில்லை"

நாம் விதைக்கும் விதைகளில் முயற்சியுடன் மண்ணைப் பிளந்து கொண்டு வருபவையே செடிகளாகின்றன. தயங்கி நிற்பவை தங்கி விடுகின்றன. அதுபோல கவியரசி தயங்காமல் துணிச்சலாகச் செயல்பட்டதால் வெற்றி பெற்றாள் எனக் ஆசிரியை கூறினார். கவியரசிக்குப் பாராட்டுகளையும் பரிசுகளையும் வழங்கினார். கவியரசியும் மகிழ்ச்சியடைந்தாள்.

"முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்."

வாங்க பேசலாம்

- போட்டி நடந்த இந்த வகுப்பறையில் நீ இருந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?
- பளு தூக்குதல் போன்ற கடினமான வேலைகளை ஆண் பெண் இருவராலும் செய்ய முடியுமா? உனது கருத்து என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக

படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. வகுப்பறை என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

(அ) வகுப்பு + அரை (ஆ) வகுப்பு + அறை

(இ) வகு + அறை (ஈ) வகுப் + அறை

2. இகழ்ச்சி என்ற சொல் உணர்த்தும் பொருள் ....

(அ) மகிழ்ச்சி (ஆ) மதிப்பு

(இ) அவமதிப்பு (ஈ) உயர்வு

3. பெரிய என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....

(அ) சிறிய (ஆ) நிறைய

(இ) அதிகம் (ஈ) எளிய

4. வெற்றி என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....

(அ) சாதனை (ஆ) மகிழ்ச்சி

(இ) நன்மை (ஈ) தோல்வி

5. மண்ணைப்பிளந்து என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

(அ) மண் + பிளந்து (ஆ) மண்ணைப் + பிளந்து

(இ) மண்ணை + பிளந்து (ஈ) மன் + பிளந்து

வினாக்களுக்கு விடையளி

1. மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர் அறிவித்த போட்டி என்ன?
2. மாணவ மாணவிகள் போட்டியில் பங்கேற்காததற்குக் காரணங்கள் யாவை?
3. கவியரசியின் வெற்றிக்குக் காரணம் என்ன?

பாடப் பொருளை வரிசைப்படுத்துவோமா?

1. இவ்வளவு பெரிய பெட்டியினை நம்மால் தூக்க இயலாது என்றனர் சிலர். ☐
2. ஆசிரியரும் மாணவரும் கவியரசியைப் பாராட்டினர். ☐
3. தம்மால் முடியும் என்று முயன்றதால் கவியரசி வெற்றி பெற்றாள். ☐
4. ஆசிரியர் ஒரு போட்டியினை அறிவித்தார். ☐
5. அறையின் நடுவே ஒரு பெட்டி இருந்தது. ☐

பழத்திற்குள் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்கலாமா?

எ. கா: 1. ஆசிரியர்

2. ____________
3. ____________
4. ____________
5. ____________
6. ____________
7. ____________
8. ____________
9. ____________
10. ____________

பொருத்தமான எதிர்ச்சொல் சாவியைக் கொண்டு பூட்டைத் திறப்போமா?



இணைந்து செய்வோம்

மாணவர்களுக்கு வேண்டிய குணங்களைக் கொண்ட மீன்களுக்கு மட்டும் வண்ணமிடுக



மொழியோடு விளையாடு

அம்புக்குறியுடன் கூடிய சுழல் அட்டையில் மொழிமுதல் எழுத்துகளை எழுதிக் கொள்ள வேண்டும். மாணவர்களை வட்ட வடிவில் அமர வைத்து இந்த அட்டையினைக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் அம்புக்குறியினை வேகமாகச் சுற்றி விடுவர். அம்புக்குறி எந்த எழுத்தில் நிற்கிறதோ, அந்த எழுத்தில் தொடங்கும் ஏதேனும் ஒரு சொல்லை அந்த மாணவர் கூறவேண்டும். இவ்வாறே அனைத்து மாணவரையும் பங்கேற்கச் செய்தல் வேண்டும். பயன்படுத்திய பின்பு எழுத்துகளை மாற்றி மீண்டும் பயன்படுத்தவேண்டும்.



கலையும் கைவண்ணமும்

பயன்படுத்திய மற்றும் உபயோகமற்ற பொருள்களைக் கொண்டு பல்வேறு உருவங்கள் செய்து மகிழ்க.

செயல் திட்டம்

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பது போன்று தன்னம்பிக்கையை வளர்க்கும் ஏதேனும் ஐந்து பொன்மொழிகள் மற்றும் பழமொழிகளை எழுதித் தொகுத்து வருக.

7 சான்றோர் மொழி

L2J2CY

இனியவை நாற்பது

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது

– பூதஞ்சேந்தனார்

பாடல் பொருள்

கற்றவர்களின்முன் தான் கற்ற கல்வியைக் கூறுதல் இனிமையானது. அறிவில் மேம்பட்டவர்களுடன் சேர்ந்திருப்பது மிகவும் இனிமையானது. எள் அளவு சிறியதாயினும் தான் பிறரிடம் கேட்டுப் பெறாமல், பிறருக்குக் கொடுத்தல் எல்லாவற்றையும்விட இனிமையானதாகும்.

பொருள் அறிவோம்

மிக்கார்	: அறிவில் மேம்பட்டவர்
எள்துணை	: எள் அளவு
எத்துணையும்	: எல்லாவற்றிலும்
மாண்பு	: பெருமை

நூலைப்பற்றி...

இந்நூல் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனாரால் எழுதப்பட்டது. வாழ்க்கைக்கு நன்மை தரும் இனிய கருத்துகளைக் கூறுவது. நாற்பது பாடல்களைக் கொண்டது. எனவே இனியவை நாற்பது என்று அழைக்கப்படுகிறது.

செய்யுளைத் தெளிவான உச்சரிப்புடன் படித்தல், அதன் சரியான பொருளைப் புரிந்து கொண்டு கருத்தை வெளிப்படுத்துதல்.

வாங்க பேசலாம்

- பாடலைச் சரியான உச்சரிப்புடன் படித்துக்காட்டுக.
- கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
- உன் நண்பனின் தேவை அறிந்து அவன் கேட்காமலேயே உதவிய அனுபவம் உனக்கு உண்டா? அதில் உனக்கு மகிழ்ச்சியா? வருத்தமா? ஏன்? கலந்துரையாடு...

படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. உரைத்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ....

   (அ) பாடுதல் (ஆ) வரைதல்

   (இ) சொல்லுதல் (ஈ) எழுதுதல்

2. ஈதல் என்ற சொல் குறிக்கும் பொருள் ....

   (அ) கொடுத்தல் (ஆ) எடுத்தல்

   (இ) தடுத்தல் (ஈ) வாங்குதல்

3. மிக்காரை என்ற சொல்லின் எதிர்ச்சொல் ....

   (அ) அறிவிலாதார் (ஆ) அறிந்தோரை

   (இ) கற்றோரை (ஈ) அறிவில்மேம்பட்டவர்

4. இரவாது என்ற சொல் குறிக்கும் பொருள் ....

   (அ) பிறரிடம் கேட்டுப் பெறாது (ஆ) பிறரிடம் கேட்டுப் பெறுவது

   (இ) பிறரிடம் கொடுப்பது (ஈ) பிறருக்கு கொடுக்காது

5. சேர்தல் என்ற சொல் குறிக்கும் பொருள் ....

   (அ) தேடுதல் (ஆ) பிரிதல்

   (இ) இணைதல் (ஈ) களைதல்

பொருள்பட எழுதிப் படித்து மகிழ்க

1. என க்குஇனி ப்புபி டிக்கும்

   ________ ________ ________

2. உழை ப்புஉ யர்வுத ரும்

   ________ ________ ________

3. மர ம் வள ர்ப்போ ம்ம ழைபெ றுவோம்

   ________ ________ ________ ________

4. சுத் தம்சு கம்த ரும்

   ________ ________ ________

5. இனி யதமி ழில்பே சுங்கள்

   ________ ________ ________

நீ எதை விரும்புவாய்? ஏன்? கலந்துரையாடுக

உன்னை அறிந்துகொள்

- உன் நண்பனை உனக்குப் பிடிக்கக் காரணங்கள் எவை?
- உன்னிடத்தில் உனக்குப் பிடிக்காதது எது?
- வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.



சிந்திக்கலாமா?

காதரும் அப்துலும் சகோதரர்கள், இருவரும் தங்களுக்குக் கிடைக்கும் சிறு தொகையைச் சேமித்து வருகின்றனர். அந்த ஆண்டு ஏற்பட்ட புயல் பாதிப்பினை அறிந்த காதர் புயல் நிவாரண நிதிக்காக, தான் உண்டியலில் சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொடுக்க நினைக்கிறான். அவனின் தம்பி அப்துல், தனது சேமிப்பில் இருந்து கிடைத்த தொகையினைக் கொண்டு பிடித்தமான பொருளை வாங்கிக் கொள்ள நினைக்கிறான். இவர்கள் இருவரில் நீ யாராக இருக்க விரும்புகிறாய்? அதற்குரிய காரணங்களைக் கூறு.

செயல் திட்டம்

'கல்வி' என்ற அதிகாரத்தில் இருந்து எவையேனும் ஐந்து திருக்குறள்களைப் படித்து, எழுதி வருக.

8 நூலகம்



மாமா!.......மாமா! என அழைத்தபடி தேனருவி வீட்டிற்குள் வந்தாள்.

மாமா: என்னம்மா! தேனருவி ஏன் இப்படி ஓடி வருகிறாய்?

தேனருவி: நான் வழக்கமாகப் பள்ளிக்கூடம் போகும் வழியில் உள்ள ஒரு கட்டடத்தைத் தோரணம் கட்டி அழகுபடுத்தியிருந்தார்கள். அதில் நூலகம் என்று எழுதியிருக்கு அப்படின்னா... என்ன மாமா....?

மாமா: அதுவா! நூல்களைச் சேமித்து வைத்திருக்கும் இடம்தான் நூலகம். அது ஒரு பொது இடம். அங்கு அனைவரும் வந்து புத்தகம் படிப்பாங்க ! இன்று "நூலக தினம்" அதைக் கொண்டாடுவதற்காக நூலகத்தை அழகுபடுத்தியிருப்பார்கள்.

கேட்கும் செய்திகளைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துதல்



தேனருவி: அப்படியா? நாமும் சென்று நூலக தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வோமா?.

மாமா: சரி தேனருவி! வா போகலாம்.

தேனருவி: நூலகத்தைப் பற்றி எனக்கு விளக்கமாகச் சொல்லுங்க... மாமா.

மாமா: சொல்கிறேன் கேள், 'நூல் + அகம் = நூலகம்'. பல்வேறு துறை சார்ந்த நூல்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடமே நூலகம் ஆகும். நூல் நிலையம், புத்தகச் சாலை என்பன நூலகத்தின் வேறு பெயர்களாகும்.

தேனருவி: மாமா இங்கு என்னென்ன நூல்கள் இருக்கும்?

மாமா: நூலகத்தில் அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், தமிழ், ஆங்கிலம், மற்றும் வேறு பல மொழிகளைச் சார்ந்த இலக்கிய நூல்கள், அறிவியல் நூல்கள், தத்துவ நூல்கள், வரலாற்று நூல்கள், பூகோள நூல்கள் போன்றவையும் இடம் பெற்றிருக்கும்.

நூல்கள் மட்டுமின்றி நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், பல்வேறு வேலைவாய்ப்புகளைப் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும் இதழ்கள் ஆகியவையும் இடம்பெற்றிருக்கும்.



தேனருவி: அடேங்கப்பா ! நூலகத்தில் இவ்வளவு வகை நூல்களா? அது சரி மாமா நூலகத்தினால் நமக்கு என்ன பயன்?

மாமா: ம்............. என் செல்லக் குட்டி கேட்டால் சொல்லாமல் இருப்பேனா? இங்கு வந்து நமக்குத் தேவையான அல்லது பிடித்த நூல்களை எடுத்துப் படிக்கலாம். நூலகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தால் நூல்களை வீட்டிற்கே கொண்டு சென்றும் படிக்கலாம் ஆனால் குறிப்பிட்ட நாளில் மீண்டும் புத்தகங்களைத் திருப்பி அளித்து விடவேண்டும். இதனால்,

- நம் அறிவு வளர்கிறது.
- நம்முடைய நேரம் பயனுள்ள முறையில் அமைகிறது.
- வேலைவாய்ப்புத் தொடர்பான நூல்களைப் படிப்பதால் நல்ல வேலையில் சேரவும் முடிகிறது.
- மூளை புத்துணர்ச்சி பெறுகிறது.
- தன்னம்பிக்கை ஏற்படுகிறது.

தேனருவி: மாமா! நூலகம் பற்றி நிறைய செய்திகளைத் தெரிந்து கொண்டேன்.

மாமா: தேனருவி குழந்தைகளுக்கான சிறப்பம்சம் நூலகத்தில் உள்ளது. அது என்ன தெரியுமா?

- இங்கே குழந்தைகளுக்கான பிரிவு தனியாகவே உள்ளது.
- நூலகத்தில் உள்ள " வாசகர் வட்டம்" மூலமாக "நூலக தினத்தன்று" குழந்தைகளுக்கான போட்டிகள் அனைத்து நூலகங்களிலும் நடத்தப்படுகின்றன.
- போட்டிகளில் கலந்து கொள்வோருக்காகவும், போட்டித் தேர்வினை எழுதுவோருக்காகவும் தனியே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- ஒவ்வொரு குழந்தையும் அவரவர் வீட்டில் நூலகம் அமைக்க வேண்டும் அதில் நிறைய புத்தகங்களைச் சேமித்து வைத்து புத்தகம் படிக்கும் பழக்கத்தினை வளர்த்துக் கொள்ள வேண்டும்,

தேனருவி: நன்றி மாமா!............ நான் நம் வீட்டில் ஒரு "சிறிய நூலகத்தை" அமைப்பேன்.

அதில் நிறைய நூல்களைச் சேமித்து வைத்துப் படிப்பேன்

அறிந்துகொள்வோம்

- படிப்புதான் ஒருவன் உயர வழி

–காமராசர்

- புத்தகங்கள் படிப்பதையே வழக்கமாக்குங்கள்.

–அப்துல்கலாம்

வாங்க பேசலாம்

- உன் பள்ளி நூலகத்தில் உள்ள நூல்களுள் நீ படித்த ஏதேனும் ஒரு நூல் / கதை பற்றி வகுப்பறையில் கலந்துரையாடு.
- அருகில் உள்ள நூலகத்திற்குச் சென்று வந்த அனுபவத்தைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடு.

படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

W9BCY7

1. நூல் இச்சொல் உணர்த்தும் பொருள் ....

(அ) புத்தகம் (ஆ) கட்டகம்
(இ) ஒட்டகம் (ஈ) கோல்

2. அறிஞர் இச்சொல் உணர்த்தும் பொருள் ....

(அ) அறிவில் சிறந்தவர் (ஆ) கவிதை எழுதுபவர்
(இ) பாடல் பாடுபவர் (ஈ) மருத்துவம் பார்ப்பவர்

3. தேனருவி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

(அ) தேன் + அருவி (ஆ) தே + னருவி
(இ) தே + அருவி (ஈ) தேனி + அருவி

4. புத்துணர்ச்சி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....

(அ) புதுமை + உணர்ச்சி (ஆ) புத்து + உணர்ச்சி
(இ) புதிய + உணர்ச்சி (ஈ) புது + உணர்ச்சி

5. அகம் இச்சொல்லின் எதிர்ச்சொல் ....

(அ) உள்ளே (ஆ) தனியே
(இ) புறம் (ஈ) சிறப்பு

6. தேன் + இருக்கும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

(அ) தேன்இருக்கும் (ஆ) தேனிருக்கும்
(இ) தேனிறுக்கும் (ஈ) தேனிஇருக்கும்

வினாக்களுக்கு விடையளி

1. நூலகத்தின் வேறு பெயர்கள் யாவை?

2. நூலகத்தின் பயன்கள் யாவை?

3. நூலகத்தில் குழந்தைகளுக்கான சிறப்பம்சங்கள் என்னென்ன உள்ளன?

4. நீ நூலகத்திற்குச் சென்று வந்ததைப் பற்றி எழுதுக.

சொற்களை உருவாக்குவோமா?

எ. கா: வரிக்குதிரை – வரி, குதிரை, குதி, திரை, வரை

1 திருநெல்வேலி

= _________ _________

பனிப்புயல் = _________ _________ _________

எழுத்துகளை முறைப்படுத்தி சொல் உருவாக்குக

1.

கூ	க்	ட	ளி	ம்	ப	ள்

2.

நூ	க	தி	ல	ம்	ன

3.

ள்	ழ	ந்	கு	தை	க

4.

ம	வ	ன	மை	லி

5.

பு	து	ர்	த்	ச்	ண	சி

நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்திப் படிப்போமா?

PG84K9

நூலகத்திற்கு நீ சென்றுள்ளாயா? அங்குப் பலவகையான நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. சிறுகதைப் புத்தகங்கள், புதினங்கள், வரலாற்று நூல்கள், இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள் என வரிசைப்படுத்தி வைத்திருப்பர். சிறுவர் இதழ்கள் செய்தித்தாள்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் போன்ற இதழ்களும் உண்டு. ஆஹா! அங்குச் சென்று படிக்கத் தொடங்கினால் நேரம்போவதே தெரியாது. நூலகத்தின் பொறுப்பாளர் நூலகர் ஆவார். நூலகத்தில் அமைதி காத்திடல் வேண்டும்.

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:

பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்தாள் பூமலர். விளையாடுவதற்காகத் தன் தோழி மாலதி வீட்டிற்குச் சென்றாள் வழியில் இரண்டு சிறுவர்கள் வேலியில் உள்ள ஓணானை அடிப்பதற்குக் கையில் கல்லோடு குறிபார்த்துக் கொண்டிருந்தனர். பூமலர் அவர்களிடம், ஓணானை அடிக்காதீர்கள், உங்களை அடித்தால் உங்களுக்கு வலிக்கும் அல்லவா? அது போல அதற்கும் வலிக்கும் எனவே உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது என்றாள். சிறிது யோசித்த அச்சிறுவர்கள் கற்களைக் கீழே போட்டுவிட்டுத் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்தனர்.

1. பூமலர் யார் வீட்டிற்கு விளையாடச் சென்றாள்?

2. சிறுவர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்?

3. உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது என்று கூறியவர் யார்?

4. இப்பத்தியில் இருந்து நீ அறிந்து கொண்டது என்ன?

பொருத்தமான சொல்லால் நிரப்புக

1. இல்லாமல் ________________ முடியாது

2. இல்லாமல் செடி ________________

3. இல்லாமல் வண்டி ________________

ஓடாது

சமைக்க

வளராது

செயல் திட்டம்

அருகில் உள்ள நூலகத்திற்குச் சென்று உனக்கு விருப்பமான சிறுவர் இதழ்களைப் படித்து அதில் உனக்குப் பிடித்த இரண்டினை எழுதி வரவும்.

9 மாட்டு வண்டியிலே...

இளமதியும் மணவாளனும் தங்களது தாத்தாவுடன் வார விடுமுறைக்கு அத்தை வீட்டிற்குச் செல்லத் திட்டமிட்டனர். சலங்கை கட்டிய மாடுகளை வண்டியில் பூட்டினார் தாத்தா. வண்டியின் மீது வைக்கோலைப் பரப்பி மேலே வெள்ளை வேட்டியினை விரித்தார். துள்ளிக் குதித்தபடி ஏறி அமர்ந்தனர் இருபிள்ளைகளும்.

'ஜல் ஜல்' எனச் சத்தமிட்டவாறு வண்டி கிராமத்துச் சாலையில் ஓடத் தொடங்கியது. சாலையின் இருமருங்கிலும் பசுமை போர்த்திய வயல்வெளிகள். தாத்தா மாடுகளை விரட்டியபடி இனிமையாகப் பாடத் தொடங்கினார்.

கழுத்துமணி தாளம் போட
சக்கரமும் சுழன்றோட
உச்சி மண்டையிலே
வெயில் காயுமுன்னே
குண்டு குழிபார்த்து
ஊர் போய்ச் சேர வேணும்
ஊர் போய்ச் சேர வேணும்
வா வா என் செல்லக்கண்ணு..........



புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுதல்

பாடினது போதும். ஏதாவது கதை சொல்லுங்க தாத்தா என்றனர் பிள்ளைகள். சொல்லிட்டாப் போச்சி, கதையென்ன புதிர் போடறேனே. சொல்லுங்க பார்க்கலாம்

தாத்தா: மூன்றாம் எழுத்து உடலின் உறுப்பு, முதலும் மூன்றும் நட்புக்கு எதிரி, ஒன்றும் இரண்டும் நிறைய தரும், மூன்றும் சேர்ந்தால் உட்கார உதவும் அது என்ன?

இளமதி: ம்.......... யோசித்துவிட்டு, 'தெரியலை' தாத்தா

தாத்தா: யோசிங்க.......... யோசிங்க.......... நல்லா யோசிங்க

ஓரெழுத்து உறுப்பு எது? இளமதி நீ சொல்லு

இளமதி: 'கை' தாத்தா

தாத்தா: கொஞ்சமாயிருந்தா சில ன்னு சொல்லுவோம் நிறைய இருந்தா என்ன சொல்லுவோம்?

இளமதி: 'பல' தாத்தா ஆங்..........

மணவாளன்: எனக்குப் பதில் கிடைச்சிருச்சி.......... 'பலகை' – இது சரியா தாத்தா ....

தாத்தா: நல்லது மிகச்சரியான பதில், இப்ப இளமதியைக் கேட்கிறேன்...........

ஆறையும் ஐந்தையும் கூட்டினால் பணம் வராது........

ஆனா பழம் வரும் அது என்ன?

இளமதி:	சற்று யோசித்து .... ஆங் .... கண்டுபிடிச்சிட்டேன் .... ஆரஞ்சுப்பழம் தானே ....
தாத்தா:	சரியா சொல்லிட்டியே, செல்லக்குட்டி
மணவாளன்:	சரி தாத்தா .... இப்ப நாங்க கேட்கிறோம் ..... நீங்க சொல்லுங்க, பிறக்கும்போது நிறமும் சுவையும் இல்லாத சுந்தரன் ஊருக்கு ஊர் நிறம் மாறிச் சுவை மாறுவான் அவன் யார்?
தாத்தா	இதென்ன பிரமாதம்........ எனக்குத்தான் தெரியுமே..........
இளமதி:	பேச்சை மாத்தாதீங்க தாத்தா பதிலைச் சொல்லுங்க. சீக்கிரம்.........
தாத்தா	ம் ம் ம் .... எல்லாரோட தாகத்தையும் தீர்க்கும் தண்ணீர் தானே
மணவாளன்:	ஆமா! ஆமா! சரியா சொல்லிட்டிங்களே!
இளமதி:	தாத்தா, அத்தை வீடு வந்துவிட்டது.
தாத்தா	சரி, சற்றுப் பொறுங்கள் வண்டியை ஓரமாக நிறுத்துகிறேன்.
	அனைவரும் வண்டியைவிட்டு இறங்கி, ஆவலுடன் வீட்டை நோக்கிச் சென்றனர்.

வாங்க பேசலாம்

மாட்டு வண்டியில் அல்லது வேறு ஏதேனும் வாகனத்தில் வெளியூர் சென்றிருக்கிறாயா? அப்படி நீ சென்று வந்த அனுபவம் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தண்ணீர் இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது ....

(அ) தண் + ணீர்	(ஆ) தண் + நீர்
(இ) தண்மை + நீர்	(ஈ) தன் + நீர்

2. மேலே இச்சொல்லின் எதிர்ச்சொல் ....

(அ) உயரே	(ஆ) நடுவே
(இ) கீழே	(ஈ) உச்சியிலே

3. வயல் + வெளிகள் – இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

(அ) வயல்வெளிகள்	(ஆ) வயவெளிகள்
(இ) வயற்வெளிகள்	(ஈ) வயல்வளிகள்

4. கதை + என்ன – இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ....

(அ) கதைஎன்ன	(ஆ) கதையன்ன
(இ) கதையென்ன	(ஈ) கதயென்ன

5. வெயில் இச்சொல்லின் எதிர்ச் சொல் ....

(அ) நிழல்	(ஆ) பகல்
(இ) வெப்பம்	(ஈ) இருள்

இணைக்கலாமா?

அச்சாணி	பச்சை நிறம்.
பசுமை	நெற்பயிரின் உலர்ந்த தாள்
வைக்கோல்	வண்டிச்சக்கரம் உருண்டு செல்ல உதவும் ஆணி

சொல் கோபுரம் அமைப்போம்

இதனைக் 'கரம்' என்றும் கூறலாம் [1]

பசு கொடுக்கும் பானம் [2]

ஆறுகள் சென்று சேருமிடம் [3]

வண்டியில் சக்கரம் கழன்று விழாமல் பாதுகாப்பது [4]

பாலைவனக்கப்பல் [5]



பொருத்தமான படங்களை மரத்திலிருந்து பறித்துப் பொருத்தலாமா!

1. எட்டுக் கைகள் விரிந்தால் ஒற்றைக்கால் தெரியும் அது என்ன? ....
2. அடிமலர்ந்து, நுனி மலராத பூ என்ன பூ? ....
3. கையிலே அடங்கும் பிள்ளை, கதை நூறு சொல்லும் பிள்ளை அது என்ன? ....
4. அன்றாடம் மலரும் அனைவரையும் கவரும் அது என்ன? ....
5. என்னோடு இருக்கும் சிறுமணி, எனக்குத் தெரியாது ஆனால் உனக்குத் தெரியும் அது என்ன? ....
6. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது. அது என்ன? ....
7. அடி காட்டுக்கு, நடு மாட்டுக்கு, நுனி வீட்டுக்கு அது என்ன? ....
8. ஒளி கொடுக்கும் விளக்கல்ல, வெப்பம் தரும் நெருப்பல்ல, பளபளக்கும் தங்கம் அல்ல அது என்ன? ....

மொழியோடு விளையாடு

புதிர்களையும் விடைகளையும் எழுதிய அட்டைகளை வகுப்பறையின் நடுவில் வைக்க வேண்டும். மாணவர்களை அழைத்து ஒவ்வொரு மாணவனையும் ஓர் அட்டையை எடுக்கச் சொல்ல வேண்டும். புதிர் அட்டையை வைத்திருக்கும் மாணவனோடு அப்புதிருக்கான விடையை வைத்திருக்கும் மாணவன் இணைந்து நிற்க வேண்டும். அவர்கள் இருவரும் அதற்கான விளக்கத்தை அளிக்கவேண்டும். இருவரும் இச்செயலைச் செய்து முடிக்கும் கால அளவை குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த இருவர் இவ்விளையாட்டை விளையாடுவர். எவர் இருவர் குறைவான கால அளவில் இணை சேர்ந்தனரோ அவர்களே வெற்றி பெற்றவராவர். அனைத்து மாணவர்களையும் விளையாட்டில் பங்கு பெறச்செய்ய வேண்டும்.

செயல் திட்டம்

வீட்டில் உள்ள தாத்தா பாட்டியிடம் மூன்று புதிர்களைக் கேட்டறிந்து குறிப்பேட்டில் எழுதி வருக.

அகர முதலி

1.	அறிஞர்	–	அறிவில் சிறந்தவர்
2.	ஆன்றோர்	–	பெரியோர்
3.	இரவாது	–	பிறரிடம் கேட்டுப் பெறாது
4.	ஈதல்	–	கொடுத்தல்
5.	உரைத்தல்	–	சொல்லுதல்
6.	ஒலி	–	சத்தம்
7.	ஒளி	–	வெளிச்சம்
8.	கதிரவன்	–	சூரியன்
9.	களிப்பு		மகிழ்ச்சி
10.	காலை	–	சூரியன் உதிக்கும் நேரம்
11.	காளை	–	எருது
12.	கூட்டம்	–	கும்பல்
13.	சேகரித்தல்	–	ஒன்று திரட்டுதல்
14.	சேர்த்தல்	–	இணைத்தல்
15.	தகுதி	–	தரம்
16.	தெளிவாக	–	விளக்கமாக
17.	நித்திலம்	–	முத்து
18.	நூல்	–	புத்தகம்
19.	நேர்மை	–	உண்மை
20.	பகைவர்கள்	–	எதிரிகள்
21.	பணி	–	வேலை
22.	பல்லி	–	ஒரு சிறிய உயிரி
23.	பள்ளி	–	கல்வி கற்கும் இடம்
24.	மிக்காரை	–	உயர்ந்தோரை
24.	முயற்சி	–	ஊக்கம்

திறன் பகுதி	திறன்	பாட எண்
கேட்டல்		
1.	எளிய சந்தப்பாடல்களைக் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொள்ளுதல், கருத்தினை வெளிப்படுத்துதல்.	1, 4
2.	தம்மைச் சுற்றி நடைபெறும் உரையாடல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்	2, 5
3.	வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு, விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்.	9
பேசுதல்		
1.	அறிந்த கேட்ட கதைகள், தகவல்களைத் தொடரில் பேசுதல்	3
2.	பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுதல்	1, 4
3.	கேட்டுணர்ந்த கதை, கதைப்பாடல்களின் தலைப்புகள், கதைமாந்தர்கள் பற்றி வினாக்கள் கேட்டல், கருத்தாடல் செய்து கருத்துகளை வெளிப்படுத்துதல்.	3, 6
படித்தல்		
1.	தெளிவான ஒலிப்புடன் குறில் – நெடில் மயங்கொலிப் பிழைகளின்றிப் படித்தல்	2, 8
2.	எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படித்தல்.	2, 8
3.	முற்றுப்புள்ளி, வினாக்குறி ஆகிய நிறுத்தக் குறியீடுகளை அறிந்து படித்தல்	2, 8
4.	சூழல் சார்ந்து புதிய சொற்களின் பொருள் புரிந்து படித்தல்.	2, 6, 8

திறன் பகுதி	திறன்	பாட எண்
எழுதுதல்		
1.	உரிய வடிவத்தில் முறையான இடைவெளிவிட்டு எழுதுதல்	அனைத்தும்
2.	செய்தி / உரைநடைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவித்தல், கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுதல்	அனைத்தும்
3.	புதிர்கள் துணுக்குகளுக்கு விடை எழுதுதல்	9
நடைமுறை இலக்கணம்		
1.	எழுத்துகளின் வகைகள்	3
2.	ஒருமை, பன்மை வேறுபாடு அறிதல்.(அது – அவை)	5
கற்கக் கற்றல்		
1.	சிறுவர்களுக்கான படவிளக்க அகரமுதலியைப் பயன்படுத்தல்	
2.	குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் விளையாடி மகிழ்தல்	3, 4
3.	படக்கதைகளைப் படித்தல்	3
படைப்புத்திறன்கள்		
1.	ஒரே சொல்லில் தொடங்கும், முடியும் பல்வேறு சொற்களை உருவாக்குதல்	அனைத்தும்
விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன்		
1.	பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்	2
2.	கூட்டுணர்வு	8
3.	பிறர்க்கு உதவுதல்	2

தமிழ் – மூன்றாம் வகுப்பு

கல்வி ஆலோசகர்

முனைவர். பொன். குமார்
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

மேலாய்வாளர்கள்

ஆ.சே.பத்மாவதி, எழுத்தாளர்,
சென்னை.

முனைவர். அ. மணமலர்ச்செல்வி
முதுநிலை விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர் மாவட்டம்.

ந. இராமலிங்கம், உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

பா. மலர்விழி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

சி. பன்னீர்செல்வம்,
கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

இல. சீனிவாசன், முதுகலை ஆசிரியர்,
மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி,
ஆம்பூர், வேலூர் மாவட்டம்

ஒருங்கிணைப்பாளர்கள்

முனைவர். கா.சா. மொழியரசி, முதல்வர்
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
கீழப்பழுவூர், அரியலூர்.

தே.விமலா தேவி, விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

பக்க வடிவமைப்பு

உதய் இன்போடெக்
குரோம்பேட்டை, சென்னை

சந்தோஷ்குமார் சக்திவேல்
திருவாரூர்.

தரக்கட்டுப்பாடு

ராஜேஷ் தங்கப்பன்

காமாட்சிபாலன் ஆறுமுகம்

பிரசாந்த் பெருமாள்சாமி

பாடநூல் உருவாக்கக் குழு

அ. மேரி வேளாங்கண்ணி, தலைமை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
திம்மனந்தல், விழுப்புரம் மாவட்டம்.

பெ. முருகராணி,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
இடைச்செருவாய், கடலூர் மாவட்டம்.

அனுசுயா தேவி,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
சாலையம்பாளையம்
விழுப்புரம் மாவட்டம்

சு. அமுதா,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, கீழையூர்,
அரியலூர் மாவட்டம்.

அ. குளோரி ரூபி மெர்ஸி,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
மேலரசூர், திருச்சி மாவட்டம்.

அ. ஜான்ஸிரானி,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி,
ஆமரசூர், திருச்சி மாவட்டம்.

செ. ஜெயராமன்,
பாரதியார் நினைவு ந.தொ.பள்ளி,
திருவானைக்காவல், திருச்சி மாவட்டம்.

ஆ. மேரிமாலா,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
இராசாம்பாளையம், திருச்சி மாவட்டம்.

விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

இரா. ஜெகநாதன், ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி,
கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

ஆ. தேவி ஜெஸிந்தா, பட்டதாரிஆசிரியர்,
அரசினர் உயர் நிலைப்பள்ளி,
என்.எம்.கோவில், வேலூர்.

மு. சரவணன் , பட்டதாரிஆசிரியர்,
அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி,
வாழப்பாடி, சேலம்.

வரைபடம்

இரா. வேல்முருகன்
பா. பிரமோத்
கா. தனஸ் தீபக் ராஜன்
கா. நலன் நான்சி ராஜன்
பா. ரவிகுமார்
செ. ரமேஷ்

வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்

ரமேஷ் முனிசாமி

ENGLISH

STANDARD THREE

TERM - I

Preface

The English Language textbook has been designed to enable a fun filled and engaging experience in learning the language. The approach allows for a plenty of practice in the four language skills. It focuses on structure practice and vocabulary enrichment through a variety of language learning activities. These activities evoke interest and engaged practice in the language and thus lead to retention.

As per NCF 2005, language is learnt effectively when it is taught with exposure in meaningful context rather than as a subject. In accordance with this, the textbook has been drafted with themes related or familiar to children. The units provide space for effective individual and pair work and thus allow the teacher to focus on time management in multi-level classrooms.

The textbook has been prepared with plenty of colourful illustrations to enhance its visual appeal for children. We hope that children will enjoy handling this textbook.

How to use the textbook?

- The Term - I English book for standard III has three units.
- Each unit is planned for a month.
- Nila introduces each unit.
- Each unit is designed with the things in and around the home like the utensils, the insects and the landforms.
- Attractive illustrations enhance children's interest on the subject.
- Look and say can be used to develop vocabulary and speaking skill.
- Let us sing can be used to develop listening skill and to recite the poem with a rhythm.
- Let us learn can be used to teach stories related to the theme.
- Let us understand is designed with exercises, grading from simple to challenging task for comprehension of the content.
- Let us know provides scope for teaching grammar in a context. It helps to learn grammar concepts inductively.
- Let us read is a self-reading text which develops the reading ability of the children.



- Let us use develops the ability of using structure.
- Circle time activity provides opportunity for the teacher to practise the structure through the games and activities.
- Word wall can be used to know the sight words and the phonic words.
- Let us make develops listening skill of the children by following instructions and acting accordingly. This fun oriented activity provides opportunity to enhance their creativity.
- Big Picture is designed to enrich asking questions by using " wh" words.
- I can do can be used for assessment of the content.
- Note to the teacher helps the teacher by highlighting some important suggestions.
- QR code motivates the teachers, the students as well as the parents to enrich the teaching learning process.

Unit I—Our Kitchen

- Children are always eager to play with toy utensils for making fun filled community lunch. This unit enables them to know the names of the utensils.
- Look and say page helps children to visualize the things in the kitchen and enriches their vocabulary.
- Let us practise insists on the action words related to the kitchen.
- Let us use focuses on the structure "May I/Can I?" to help children ask permission properly.



Unit II—The Insects

- Children are always eager to know about the small creatures around them.
- Look and say page helps children to name some common insects around them.
- Let us practise teaches action words related to insects.
- Let us use focuses on the structure "Here it is."

Unit III—The World Around Us

- Children are always interested in exploring many places. This unit explains various land forms.
- Look and say page helps children to name some landforms.
- Let us practise teaches children to describe landforms.
- Let us use focuses on the structure "Would you please...?" to help children request politely.



Learning outcomes

- It is a moment of pride for children as they colour the balloons.
- This self-assessment tool helps boost their self -confidence.
- It is also a diagnostic page for the teacher to ensure that each student has attained the expected learning outcome in each unit.

Let's use the QR code in the text books!

- Download DIKSHA app from the Google Play Store.
- Tap the QR code icon to scan QR codes in the textbook.
- Point the device and focus on the QR code.
- On successful scan, content linked to the QR code gets listed.

QR GUIDE

Contents

Unit	Title	Page No.
1	Our Kitchen	67
2	The Insects	87
3	World Around Us	107

QJ9KH2

e-Book

3FVF6X

Assessment

B314_3_ENGLISH_LANG

Digilinks

1 Our Kitchen

Look and say

funnel
strainer
mixer
pot
stove
knife
tablespoon
cutting-board
churner
peeler

Note to the teacher: Practise vocabulary using the picture. Ask the children to name the objects seen in the picture.

Let us sing

FCH9VT

BENDER THE BLENDER

There once was a blender,
His name was Bender,
When no one was home,
He would come alive and roam.

All his friends would be there soon,
The knife, the fork and the spoon,
They would gather around,
And run all over the ground.

Soon everyone is glum,
Hearing the car - Vroom! Vroom!
They have to draw the line,
And wait until next time.



Note to the teacher: Sing the song with actions. Encourage the children to listen and do the actions first, then follow the song.